**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 - 2021**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 3348-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சான தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேறான தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 29,642.60 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 228.02 மில்லியனானதுடன் அதில் ரூபா 15,990 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 123 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்ட அதேநேரம் ரூபா 650 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5 மில்லியன் ஆசிய அபிவிருத்தி நிதியத்தின் விசேட நிதி வளங்களால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், ரூபா 7,742.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 59.56 மில்லியன் ஐரோப்பிய முதலீட்டு வங்கியால் (ஈஐபீ) நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 5,259.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40.46 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயத்தில், ரூபா 7,231.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 55.63 மில்லியன் தொகை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 22,410.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 172.39 மில்லியன் கொழும்பு மாநகர சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களைக் கொண்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 ஆனது அதன் நடவடிக்கைகளை 2016 நவம்பர் 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. பின்னர் நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் காலப்பகுதி 2022 ஒக்தோபர் 24 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## 1.3 அபிப்பிராயம்

---

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2.3.2 ஆம் பிரிவின் பிரகாரம் வினைத்திறனான செயற்திட்ட முகமைத்துவத்தினை உறுதி செய்வதற்காக செயற்திட்ட பணிப்பாளர் எப்போதும் முழு நேர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படல் வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டப் பணிப்பாளர் 2021 பெப்ரவரி 2 முதல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மேலதிக பொது முகாமையாளராக பதவி உயர்வு பெற்றிருந்தமையினால் அவர் முழுநேர அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | பொறியியலாளர் திரு. தம்மிக்க பெரேரா முன்னாள் பிரதி செயற்திட்டப் பணிப்பாளர் (GCWWMIIP) முழுநேர அடிப்படையில் செயற்திட்டப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். | வினைத்திறனான செயற்திட்ட முகமைத்துவத்தினை உறுதி செய்வதற்காக செயற்திட்டப் பணிப்பாளர் எப்போதும் முழு நேர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படல் வேண்டும். |

## 3. பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம்

செயற்திட்டத்தின் செயற்பாடுகளானது நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01, நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 02 என்பவற்றிற்கான நிதி இடைவெளியை நிரப்புவதற்கான மேலதிக நிதியளிப்பு, மற்றும் செயற்திட்ட அபிவிருத்தி உதவி பணிகள் எனும் பெயரிலான 03 கூறுகளை கொண்டுள்ளது, மேலும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 4,940 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 38 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில், செயற்திட்டம் 01 மற்றும் செயற்திட்டம் 02 இற்கான நிதி இடைவெளியை நிரப்புவதற்கான மேலதிக நிதியளிப்பிற்காக ரூபா 4,550 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 35 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட அபிவிருத்தி உதவிப் பணிகளிற்காக ரூபா 390 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 3 மில்லியன் மிகுதி தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஐ.அ.டொலர் 38 மில்லியனில் 46.86 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 3,596.50 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 17.81 மில்லியன் மாத்திரமே செயற்திட்டம் தொடங்கப்பட்ட திகதியிலிருந்து 5 ஆண்டுகள் கடந்திருந்த பின்னரும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், செயற்திட்ட அபிவிருத்தி உதவிக் கூறின் கீழ் செயற்திட்ட ஆயத்த பணிகள் தொடர்பான தனிப்பட்ட ஒப்பந்தங்களின் செயன்முன்னேற்றம் பின்வருமாறு உள்ளன.

| கூறு/ உப கூறு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | | | | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளாின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| | தனிப்பட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | தற்போதுள்ள ஒப்பந்தங்கள் | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் | | | |
| செயற்திட்ட அபிவிருத்தி உதவி | | | | | செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல் பாதிக்கப்படுதல் | பெரும்பாலான ஒப்பந்தங்கள் கடன் முடிவடையும் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட முடியும். கடன் முடிவடைவதற்கு முன்னர் ஒவ்வொரு சேமிப்பையும் பயன்படுத்துவதற்கு உயர் முகாமைத்துவம் மற்றும் ADB உடன் நாங்கள் கலந்துரையாடி வருகிறோம்.. | ஒப்பந்தங்களை பூர்த்தி செய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (i) ஆலோசனை ஒப்பந்தம் | 10 | 10 | 03 | 07 | | | |
| (ii) பொருட்கள் மற்றும் வேலைகள் ஒப்பந்தங்கள் | 23 | 23 | 04 | 19 | | | |
| (iii) கேள்வி கோரலின் கீழ் | 21 | - | - | - | | | |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| நடைமுறையில், செயற்திட்டங்கள் தொடர்பான புவி தொழில்நுட்ப ஆய்வு மற்றும் வடிவமைப்பு பணிகள் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அதன் பிரகாரம் செயற்திட்ட அபிவிருத்தி உதவியின் கீழ் 18 புதிய செயற்திட்டங்கள் தொடர்பான அனைத்து சாத்தியவள ஆய்வுகள், திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பந்ததாரர்களைத் தெரிவுசெய்வதற்கான விலைமனுக்கள் 2021 நவம்பர் 03 இல் கோரப்பட்டிருந்தன. எனினும், இந்த புதிய செயற்திட்டங்களின் புவி தொழில்நுட்ப ஆய்வுகளுக்கான தனிப்பட்ட ஒப்பந்தங்களின் கூறுவிலைகள் 2021 செப்தெம்பர் 29 இலேயே கோரப்பட்டுள்ளதுடன் அவை 2021 திசெம்பர் 31 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் மேலே உள்ள புதிய செயற்திட்டங்களுக்கான புவிசார் தொழில்நுட்ப ஒப்பந்தங்களின் ரூபா 173 மில்லியன் பெறுமதியானது புவி தொழில்நுட்ப ஆய்வுகளுக்கு முன்னரே வடிவமைப்பு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதன் காரணமாக இது பலனளிக்குமா என்பது கணக்காய்வில் சந்தேகத்திற்குரியதாக உள்ளது. | 18 பொதிகள் 2022 சனவரியில் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. | வடிவமைப்பு வேலைகளுடன் ஒரே நேரத்தில் புவி தொழில்நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துதல், பூர்த்தி செய்தலில் தாமதங்கள் மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட செயற்திட்ட நிதிகள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஐ.அ.டொலர் 38 மில்லியன் மொத்தக் கடன் பெறுமதியில் ஐ.அ.டொலர் 35 மில்லியன் நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் - 1, நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் - 2 ஆகியவற்றுக்கான மேலதிக நிஜதியளிப்பிற்காகவும், மீதமுள்ள ஐ.அ.டொலர் 3 மில்லியன் செயற்திட்ட அபிவிருத்தி உதவி செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் 46.87 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 3,596 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 17.81 மில்லியன் மாத்திரமே செயற்திட்டத்தின் செயல்பாடுகள் தொடங்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் கடந்த பின்னரும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக, ரூபா 49.29 மில்லியன் ஆன கணிசமான தொகை குறைந்த பணவளிப்புக்கள் காரணமாக கடப்பாட்டுக் கட்டணமாக நன்கொடையளிக்கும் முகவரால் அறவிடப்பட்டிருந்தது. மேலும், 2022 ஒக்தோபர் 24 இல் செயற்திட்டத்தின் கடன் இறுதித் திகதிக்கு முன்னர் 53.11 சதவீதத்திற்கு சமமான ஐ.அ.டொலர் 20.19 மில்லியன் மிகுதி கடன் தொகையைப் பயன்படுத்துவதற்கான சாத்தியத்தன்மையானது நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் - 2 இன் கீழ் பொதி - 4 ஒப்பந்தத்தின் குறைந்த செயன்முன்னேற்றம் காரணமாக கணக்காய்வின் போது சந்தேகத்திற்கிடமாக உள்ளது. | கடனை முடிப்பதற்கு முன்னர் கடன் தொகையை வழங்க ADB, ERD மற்றும் NWSDB உயர் முகாமைத்துவத்துடன் நாங்கள் கலந்துரையாடியுள்ளோம். அதன் பிரகாரம் இரசாயனங்கள், இணைப்பு மூலப்பொருட்கள், பழுதுபார்த்தல் மூலப்பொருட்கள் ஆகியவற்றை சாத்தியமானளவு விரைவாக கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. | கடன் இறுதித் திகதிக்கு முன்னர் மிகுதிப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இச் செயற்திட்டத்தின் ஐ.அ.டொலர் 3 மில்லியன் முன்னுரிமைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. புவி தொழில்நுட்ப ஆய்வுகள் மற்றும் நிலப்பரப்பு ஆய்வு. இருப்பினும், ஆவண மதிப்பீடு மற்றும் கேள்வி கோரல் என்பன தற்போது செயன்முறையில் உள்ளதால் 2021 திசெம்பர் 31 வரையிலும் எந்த செயற்திட்டமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 11 செயற்திட்டங்களில், 5 செயற்திட்டங்கள் தொடர்வதற்காக தெரிவு செய்யப்பட்டன. இந்த 5 செயற்திட்டங்களுக்கான அனைத்து ஆவணங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. | அனைத்து செயற்திட்டங்களையும் வழங்குவதற்கு திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்திற்காக சிரேஷ்ட பொறியியலாளர் ஒருவரை மீளாய்வாண்டில் ரூபா 180,000. மாதாந்த சம்பளத்திற்கு செயற்திட்டம் ஆட்சேர்பபு செய்திருந்த போதிலும் தற்போது நடைபெற்று வரும் அளுத்கம, மதுகம, அகலவத்தை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கெத்ஹேன நீர் சுத்திகரிப்பு பொறியின் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக அவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் செயற்பாடுகளில் கலந்து கொள்ளாமல் 2021 யூன் மற்றும் 2021 நவம்பர் மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய சம்பளமாக ரூபா 1.08 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. | NRW - O&M ஒருங்கிணைப்பு விடயங்கள் போன்ற செயற்திட்ட நடவடிக்கைகளில் அவர் கலந்து கொண்டார். | செயற்திட்ட நோக்கங்களுக்கு இணங்க செயற்திட்ட நிதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது செயற்திட்ட அபிவிருத்தி உதவிக் கூறின் கீழ் ரூபா 9.16 மில்லியன் கிரயத்தில் 2 சட்ட நிபுணர்கள் மற்றும் 2 பெறுகை நிபுணர்களுடன் தனிப்பட்ட ஆலோசனை ஒப்பந்தங்களை செயற்திட்டம் கைச்சாத்திட்டிருந்தது. அதில் ரூபா 667,000 தொகை செயற்திட்ட வரம்பிற்கு வெளியே உள்ள ஏனைய ஐந்து நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் செயற்திட்டங்களிற்குரிய பெறுகை மற்றும் சட்ட சிக்கல்கள் தொடர்பான ஆலோசனை சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக செலுத்தப்பட்டிருந்தது. | ADB இன் இணக்கப்பாட்டுடன் நாடளாவிய ரீதியிலான செயற்திட்டங்களுக்காக பகுதி 3 இல் ஐ.அ.டொலர் 3 மில்லியன் தொகை தேவைப்படுகிறது. | செயற்திட்ட நோக்கங்களுக்கு இணங்க செயற்திட்ட நிதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆம் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல்கள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இதற்கு IA, NWSDB ஆல் பதில் வழங்கப்படும். | உள்ளக கணக்காய்வை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |